Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 6, 2024


புதன்கிழமை மார்ச் 06, 2024 | ஒளி: 09 கதிர் 206 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



# சாப்பாட்டு பிரியர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

மின்சார கட்டணம் குறைக்கப்பட்டமை காரணமாக, திங்கட்கிழமை (05) நள்ளிரவு முதல் உணவு பொருட்களின் விலையினை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# “போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம்”

அரச உயர் அதிகாரிகளின் கௌரவத்தையும் அவர்களின் சேவையையும் அவமதிக்கும் வகையில் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (05) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதையடுத்து, இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பிலேயே இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## “இலங்கையர்களை மீட்க கடும் முயற்சி”



வடக்கு , கிழக்கை சேர்ந்த தமிழ் இளைஞர்கள் மியன்மார் போன்ற நாடுகளில் குற்றக்கும் பல்களிடம் அதிகளவில் சிக்கிக் கொள்கின்றனர் என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(05) பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின்போது எதிரணியில் சுயாதீன தரப்பை சேர்ந்த வசந்த யாப்பா பண்டாரவினால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.


தொடர்ச்சி P2

### சபாநாயகருக்கு எதிரான

## நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிப்பு

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை செவ்வாய்க்கிழமை (05) பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 44 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## “மக்களை ஏமாற்ற முயற்சிக்கவில்லை”


03) “மக்களை ஏமாற்ற முயற்சிக்கவில்லை”

பாராளுமன்றத்துக்கு வரும் எண்ணம் தனக்கு இல்லை என்றும் எந்த தேர்தல் நடந்தாலும் அதற்கான ஏற்பாடுகளை செய்வதாகவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான

## பாடங்களை குறைக்க தீர்மானம்




க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கையை 7 ஆகக் குறைப்பதற்குத் தீர்மானித்திருப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் சித்தி எய்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும்,

தொடர்ச்சி P2

### ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு தடை

## பாராளுமன்றம் ஊடாக நடவடிக்கை



ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்கி ஒரு வருடமாகின்ற போதும் இன்னும் தீர்ப்பு வழங்காமல் உயர்நீதிமன்றம் இந்தநாட்டின் 43 இலட்சம் மாணவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது. தீர்ப்பு வழங்கப்படாவிட்டால் பாராளுமன்றம் ஊடாக நடவடிக்கை எடுப்போம் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(05) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### “சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம்

## தமிழர்களுக்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை”



சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம், தமிழர்கள் சார்பாகக் குறிப்பாக வடக்கு,கிழக்கு தமிழர்கள் சார்பாக எந்த விதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதனால் தமிழர்கள் சிறைத்தண்டனைகள் முடிந்தும் திருச்சி சிறப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்படுகின்றமை தொடர்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான சார்ள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

### உதவித் தொகை வரி திருத்த சட்டமூலத்தை

## விவாதத்திற்கு எடுக்க கூடாது



சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகள் இல்லாமல் சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை வரி திருத்த சட்டமூலத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

### 9ஆவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக

## எஸ்.சி.முத்துக்குமாரன சத்தியப்பிரமாணம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக எஸ்.சி.முத்துக்குமாரன செவ்வாய்க்கிழமை (05) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (05) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமயில் கூடிய நிலையில்,

தொடர்ச்சி P2

## “இறக்குமதி செய்யப்படும் இறாலை மீள் ஏற்றுமதி செய்வது நாட்டுக்கு பாதிப்பு”



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இறாலை இலங்கை யின் இறாலை போன்று மீள் ஏற்றுமதி செய்வது நாட்டுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று தேசிய மக்கள் சக்தி பாரா ளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட

தொடர்ச்சி P2

### தையிட்டி விகாரை பிரச்சினை

## தீர்வு காண்பதற்கு தமிழ் அரசியல்வாதிகள் விரும்புவதில்லை



தையிட்டி பிரதேசத்தில் அமைக்கப்படும் பௌத்த விகாரை 100 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. தங்களின் உரிமை தொடர்பில் போலிப் பத்திரங்களைத் தமிழ்த் தரப்புக்கள் தயாரித்துள்ளதாக முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் தேசியப் பாதுகாப்பு மேற்பார்வைக் குழுவின் தலைவருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “இடமாற்றங்களை விடுத்து மனமாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்”



மலையக பிரதேசங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களை விடுத்து மனமாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) இடம்பெற்ற பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், மலையக பிரதேசங்களில் சேவையாற்றும் அரச உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களை விடுத்து மன மாற்றங்களைச் செய்வது சிறந்தது என்று கேட்டுக்கொள்கின்றேன். மலையக பெருந்தோட்டத்தில்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# "போலியான குற்றச்சாட்டுக்களை...

அவர் மேலும் அறிவிக்கையில், நாட்டின் அரச உயர் அதிகாரிகளின் கௌரவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடிப்படையற்ற கருத்துக்களை முன்வைப்பதை அவதானிக்க முடிகிறது. பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்திக் கொண்டு இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தெளிவு படுத்த அரச அதிகாரிகளுக்கு வாய்ப்பு கிடைக்காமல் இருப்பது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாக உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அல்லது கருத்துக்கள் தொடர்பில் அரச அதிகாரிகள் எழுத்து மூலமாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

அரசஅதிகாரிகள்குறித்துஏதேனும்குற்றச்சாட்டுக்கள். பிரச்சினைகள் காணப்படுமானால் அதனை முறையாகக் கையாள்வதற்கு வழி முறைகள் உண்டு என்பதை அறிவித்துக் கொள்கிறேன். ஆகவே அரச அதிகாரிகளை அவமதிக்கும் வகையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே நிலையியல் கட்டளையின் (91) (உ) பிரிவுக்கு அமைய அரச அதிகாரிகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஹன்சாட் பதிவில் இருந்து நீக்குமாறு உத்தரவிடுகின்றேன் என தெரிவித்துள்ளார்.



# சாப்பாட்டு பிரியர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

அதன்படி, ஒரு கோப்பை தேநீர் ஐந்து ரூபாயினாலும், ஒரு கோப்பை பால் தேநீர் 10 ரூபாயினாலும், சிற்றுண்டிகள் 10 ரூபாயினாலும், குறைக்கப்படவுள்ளன.

அத்துடன், சோற்றுப்பொதி ஒன்று 25 ரூபாயினாலும் கொத்து மற்றும் ப்ரைட் ரைஸ் ஆகியன 50 ரூபாயினாலும் குறைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிசாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில் உணவுப்பொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு நேற்று முன்தினம் அந்த சங்கம் தீர்மானித்திருந்தது.

அத்துடன், உணவுப்பொருட்களின் விலையினை இந்த வாரத்தில் மீண்டும் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷன் தெரிவித்துள்ளார்.



# "மக்களை ஏமாற்ற...

செவ்வாய்க்கிழமை (05) காலை நாடு திரும்பிய பசில் ராஜபக்ஷ, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறியுள்ளதாவது, தேவையான இடங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவேன் என நம்புவதாக தெரிவித்த பசில் ராஜபக்ஷ, ஒவ்வொரு தேர்தலும் சவாலாகவே உள்ளது.

மேலும், நாங்கள் ஒருபோதும் மக்களை ஏமாற்ற முயற்சிக்கவில்லை. மக்கள் சொல்வதைச் செய்கிறோம். சில இடங்களில் தவறு செய்கிறோம். மக்கள் நாங்கள் சொல்வதை ஏற்க மாட்டார்கள். சில சமயங்களில் மக்கள் சொல்வதை நாங்கள் ஏற்கவில்லை. அவற்றை நாங்கள் திருத்துகிறோம் என தெரிவித்துள்ளார்.

# க.பொ.த சாதாரண தர...

க.பொ.த உயர்தரத்தில் அம்மாணவர்களுக்கு அவர்கள் விரும்பிய மற்றும் திறனைக் கொண்டிருக்கும் பாடவிதானங்களில் தொழிற்பயிற்சி வழங்கப்படும் எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி, இவ்வருடம் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய 3,370,000 மாணவர்களில் 50,000 மாணவர்களுக்கு ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றில் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# "இலங்கையர்களை மீட்க கடும் முயற்சி"

மேலும் அமைச்சர் அலிசப்ரி கூறுகையில், மியன்மாரில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்காக வெளிவிவகார அமைச்சு கடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

அவர்களில் 8 பேர் தற்போது மீட்கப்பட்டுள்ளனர். இதற்காக நாங்கள் எங்கள் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இந்நிலையில், மீட்கப்பட்டவர்கள் தற்போது அங்குள்ள பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் ஏன் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் எவ்வாறான இராஜதந்திரம் உள்ளது என்று கேள்வியெழுப்புகின்றேன்.

மியன்மார் உள்விவகார அமைச்சுடன் இணைந்து அங்குள்ள இலங்கையர்களை மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். எமது அமைச்சு அங்குள்ள தூதுவருடன் கலந்துரையாடி வருகின்றது.

மீட்கப்பட்டவர்களை விரைவில் நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றே தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் மட்டுமன்றிஇந்தியா, நேபாளம்,பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களும் மியன்மாரில் சட்டவிரோத குற்றக்கும்பலால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவே தெரியவருகின்றது.

56 பேர் அங்கிருப்பதாக தெரியவந்ததுடன், 8 பேர் தற்போது மீட்கப்பட்டுள்ளனர். அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஊடாக இணையத்தளம் ஊடாக நிதிமோசடிகளில் ஈடுபட பலவந்தப்படுத்துகின்றனர். அவர்களுக்கென வழங்கப்படும் பொறுப்பைசரியாக செய்யாவிட்டால் தாக்கப்படுகின்றனர் என்றார்.

# "சென்னையில் உள்ள...

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06) இடம்பெற்ற பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், மன்னார், நெடுந்தீவு, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் இந்தியப் படகுகள் எல்லை தாண்டி வந்து இலங்கை கடற்படை கைது செய்தால், அந்த இடத்திற்கு உடனடியாக இந்தியத் தூதரகத்திலிருந்து வருகின்றார்கள். கைதானவர்களுக்கு அவர்களுக்குச் சாப்பாடுமுதல் சட்டத்தரணிகள் வரை ஏற்பாடு செய்து அவர்களின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கின்றார்கள். 14 நாட்கள் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டால் 14 நாட்களின் பின்னர் இந்திய அரசு அவர்களை தமது நாட்டுக்கு அனுப்பி வைக்கின்றது.

ஆனால், இலங்கையிலிருந்து ஒருவர் எல்லை தாண்டி இந்தி யாவு க்குச் சென்றாலோ அல்லது வேறு விடயங்களில் இந்திய நீதிமன்றங்களில் இலங்கையர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டாலோ அவர் நேரடியாகத் திருச்சி சிறப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்படுகின்றார்கள். ஆனால், இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரக ம் இவர்கள் தொடர்பில் எந்தவித மான நடவடி க்கையும் எடுப்பதில்லை. 4 மாதங்களுக்கு முன்னர் கூட தலைமன்னாரிலிருந்து நபர்கள் எல்லை தாண்டி சென்று அங்குப் பிடிபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு நீதிமன்றம் வழங்கிய தண்டனையும் முடிந்து விட்டது. இதேபோன்று தலைமன்னாரிலிருந்து சென்ற இருவரும் அங்குப் பிடிபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு நீதிமன்றம் வழங்கிய தண்டனையும் முடிந்து விட்டது. ஆனால், இவர்கள் திருச்சி சிறப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டுள்ளார்கள்.

வெளியுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரியிடமிருந்து சென்ற, பிடிபட்ட இருவரினதும் பெற்றோர் சார்பில் அவர்கள் இரு வரையும் இலங்கை அழைத்து வர நடவடிக்கை எடுக்கும்படி கடிதத்தைக் கையளித்தேன். ஆனால் இன்றுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. குறிப்பாகச் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் தமிழர்கள் சார்பாகக் குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் சார்பாக எந்தவிதமான நடவடிக்கையும் அவர்கள் எடுப்பதில்லை. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றார்.

# விவாதத்திற்கு...

மேலும் அவர் கூறுகையில், சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை வரி (திருத்த) சட்டமூலம் மற்றும் பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ள போதிலும், சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து இது தொடர்பான பரிந்துரை எதுவும் முன்வைக்கப்படவில்லை என அறியமுடிகிறது.

சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை புரள்வை வைத்தே அறவீடு செய்யப்படுகிறது. இதற்குத் தேவையான சட்ட வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் முறையான வேலைத்திட்டம் இல்லாததால், நுகர்வோர் மீது திணிக்கும் சூழ்நிலை நிலவுவதாலும், வற் வரி அதிகரிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு உதவித் தொகை திருத்தச் சட்டமூலங்கள் இரண்டையும் எதிர்க்கட்சி எதிர்க்கிறது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்புகள் இன்றி இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது.

# எஸ்.சி.முத்துக்குமாரன...

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அநுராதபுர மாவட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே எஸ்.சி.முத்துகுமாரன இவ்வாறு நியமிக்கப்பட்டார்.

1953ஆம் ஆண்டு பிறந்த எஸ்.சி.முத்துகுமாரன அநுராதபுரம் மத்திய கல்லூரியில் தனதுகல்வியைப் பெற்றுக்கொண்டார்.

இவர் 1977ஆம் ஆண்டு தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். 1991ஆம் ஆண்டு கலாவெவ பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டதுடன், 1993 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் வடமத்திய மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். சுதந்திரக் கட்சியின் கலாவெவ கிளையின் பிரதித் தலைவராகவும் அவர் பணியாற்றியிருந்தார்.

அத்துடன், 2000ஆம் ஆண்டு வடமத்திய மாகாண சபையின் கமத்தொழில் அமைச்சர் பதவியையும் வகித்திருந்தார். 2010ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அநுராதபுர மாவட்டத்திலிருந்து ஏழாவது பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

# "இறக்குமதி...

கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.அவர் மேலும் பேசுகையில், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும். இந்நிலையில் நாட்டின் மின்பிடித்துறை பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ளது. வருடாந்தம் 15ஆயிரம் மெற்றிக் தொன் இறால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு இருக்கையில் 600 மெற்றிக்தென் இறால் மீள் ஏற்றுமதிக்காக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் இலாபமாக கிடைக்கின்றது என்பதற்காக இவ்வாறு இறக்குமதி செய்கின்றனர். இதனை சர்வதேசத்திற்கு எமது இறாலை போன்றே விற்கின்றனர். இப்படி செய்கையில் நாங்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். எமது உள்நாட்டு இறால் உற்பத்தியாளர்கள் பெரும் நெருக்கடிகளை சந்திக்கின்றனர். இந்தியாவில் இருந்து கொண்டுவரும் இறால் ஏதேனும் பிரச்சினையால் கறுப்பு பட்டியலில் சேர்த்தால் இலங்கை இறாலுக்கே தடையேற்படும் என தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றம்...

சஜித்பிரேமதாச சபையில் விசேட கூற்று ஒன்றை முன்வைக்கையில், எமது நாட்டில் 40,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 2,2000 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆற்றிய சேவையினைப் பாராட்டி, முறையான வழிமுறையில் அவர்களை ஆசிரியத்துறையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இதற்குக் கல்வியமைச்சர் பதிலளிக்கும்போது,

2019ஆம் ஆண்டு பட்டதாரிகளை அபிவிருத்தி அதிகாரிகளாக இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் அவர்களில் 22,000 பேர் அவர்களின் பட்டத்துக்கமைவாக பாடங்களுக்கு நியமிக்காமல் எந்த வகைப்படுத்தலும் இல்லாமல் பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆரம்ப பிரிவுகளுக்கே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நான் இந்த அமைச்சைப் பொறுப்பேற்கும்போது, இந்த 22,000 பேருக்கும் பயிற்சியளிக்கப்பட்ட நியமனம் வழங்கி, 3 வருடத்துக்குபின்னர்பரீட்சைநடத்திநிரந்தரநியமனம்வழங்கவேநடவடிக்கைஎடுத்தேன்.இந்தநடவடிக்கைஆசிரியர்சேவை யாப்புக்கமைய ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளும் முறைமைக்கு மாற்றமாகும். அதன்பிரகாரம் 52,000விண்ணப்பங்கள் எமக்குக் கிடைத்தன. அவர்களை ஆசிரியர் நியமனத்துக்காகத் தெரிவு செய்யப் போட்டிப் பரீட்சை நடத்தநடடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிராகச் சிலர், எங்களைப் பயிற்றப்பட்டவர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், தங்களுக்கு அதற்கான நியமனத்தை வழங்கு மாறு தெரிவித்து நீதிமன்றம் சென்றனர். இந்தப்பரீட்சையை நடத்த அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றநிலையில், கடந்த வருடம் மார்ச் 25ஆம் திகதி பரீட்சை நடத்த இரண்டு தினங்கள் இருக்கும்போது, உயர்நீதிமன்றம் பரீட்சை நடத்த இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியது. இவ்வாறு தடை உத்தரவு வழங்கி தற்போது ஒரு வருடத்தை நெருங்கியுள்ளது. ஆனால், இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. உயர்நீதிமன்றம் இந்தநாட்டு 43 இலட்சம் மாணவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது. இந்த அபிவிருத்தி அதிகாரிகளுக்கு அரசாங்கத்தினால் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆரோக்கியமான மற்றும் சமமான கல்வியை வழங்கவேண்டும் என்பது சட்டம். அதற்காகவே ஆசிரியர் சேவை யாப்பில் இந்த விடயங்கள் இருக்கின்றன.

உயர்நீதிமன்றத்தின் நியமங்களுக்கு அமையவே நாங்கள் செயற்பட வேண்டியிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அதனால் இந்தநிலைமையை மாற்றியமைப்பதென்றால், பாராளுமன்றம் ஊடாக எமக்கு நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் . அதற்கு நான் பின்வாங்கப் போவதில்லை என தெரிவித்துள்ளார்.

# தையிட்டி விகாரை...

மேலும், இன்று (நேற்று) பாராளுமன்றத்தில் தேசியப் பாதுகாப்பு மேற்பார்வை குழுவின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் தையிட்டி பிரதேசத்தில் பௌத்த விகாரை அமைப்பது தொடர்பான பிரச்சினையை ஆய்வு செய்தார்கள். அந்த ஆய்வின்போது மிகவும் மோசமான பதிவுகளை அதனுடைய தலைவர் சரத் வீரசேகர எம்.பி. முன்வைத்துள்ளார்.

அத்துடன், 1946 ஆம்ஆண்டு தையிட்டிபிரதேசத்தில் 20 பரப்புக்காணிகள் பௌத்த விகாரைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது ஒருவர் நன்கொடையளித்துள்ளார். அது ஒரு விடயம். 2017ஆம் ஆண்டு பௌத்த விகாரையின் விகாராதிபதி என்று சொல்கின்ற பௌத்தமதகுரு 1.2 ஏக்கர்கிட்டத்தட்ட 20 பரப்புக் காணிகளை அளவீடு செய்துதரும் படி தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு கடிதம் எழுதியுள்ளார். ஆனால், தற்போது 8.98 ஏக்கர்கள் அதற்கு தேவையென இராணுவம் தீர்மானித்துள்ளது. இந்தக் கூட்டத்தில் நான் ஒரு உறுப்பினராக, 20 பரப்பாக இருந்த அந்தக் காணி எவ்வாறு 8.98 ஏக்கராக அதிகரித்தது? பிரதேச செயலாளர், மக்களின் அனுமதி இல்லாமல் அந்த தீர்மானம் எடுப்பதற்கு இராணுவத்திற்கு என்ன உரிமை இருக்கின்றது? பௌத்த விகாரை அமைப்பது தொடர்பாக எதிர்ப்புக் கூறவில்லை என்றார்.

# "இடமாற்றங்களை...

வேலைத்திட்டங்களின் போது அதிக கரிசனை காட்ட வேண்டும் என்பதுடன், அங்குள்ள மக்கள் தொடர்பில் திறந்த மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும் என்றும் கோருகின்றேன். இதேவேளை காணி விவகாரத்தில் ஜனாதிபதியின் உத்தரவுகளையும் மீறி அரச உத்தியோகத்தர்களின் காழ்புணர்ச்சி மற்றும் இனவாதத்தால் காணி உரிமை வழங்கும் நடவடிக்கைகள் பிற்போடப்படுகின்றன. இவர்களுக்கான உரிமைகளை கொடுக்க மறுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நாட்டை நேசிக்கும் மக்களாக அவர்கள் இருக்கின்றனர். 87, 88 காலப்பகுதியில் சிங்கள இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். அதேபோன்று வடக்கு, கிழக்கு இளைஞர்களும் ஆயுதம் ஏந்தினர். ஆனால் மலையக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. நாட்டை நேசித்தனர். இவ்வாறான மக்கள் உரிமைகள் மீறப்படுகின்றது. நியமனங்களிலும் தீர்வுகள் இல்லை. ஆசிரியர் நியமனத்திலும் உதவி ஆசிரியர் நியமனம்தான் வழங்கப்படுகின்றது. ஏன் இவ்வாறு செய்ய வேண்டும். பட்டதாரிகள் இருக்கின்றனர். இவர்களுக்கு நியாயமான நியமனங்கள் வேண்டும். மலையக மக்கள் பலதரப்பட்ட அநீதிகள் இழைக்கப்படுகின்றன. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது எமக்கு நம்பிக்கையுள்ளது. மலையக மக்கள் தொடர்பில் நன்கு அறிந்தவர் அவர். அனுபவசாலி இல்லையென்பதனை ஏற்றுக்கொள்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பிறந்த இலங்கையர்களின்

# பிள்ளைகளுக்கு பிரஜா உரிமை

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு செவ்வாய்க்கிழமை (05) இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது.

குடிவரவு -குடியகழ்வு திணைக்களத்தின் அனுசரணையில் ஒபர் சிலோன் எனப்படும் அரசு சார்பற்ற நிறுவன பங்களிப்போடு இவர்களுக்கான பிரஜா உரிமை பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக 22 வயதுக்கு மேற்பட்ட இந்தியாவில் பிறந்த இலங்கையர்களின் பிள்ளைகள் 71 பேருக்கு இன்று பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

இவ்வாறு பிரஜாவுரிமை பெற்றவர்கள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பை சேர்ந்தவர்களே பெற்றுக்கொண்டனர்.

90ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாக இந்தியாவுக்குச் சென்ற இலங்கையர்களுக்கு இந்தியாவில் குழந்தைகள் பிறந்த நிலையில் யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர் மீண்டும் இலங்கைக்கு வந்தவர்களுக்கே இலங்கை பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது

இந் நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ்குமார், குடிவரவு குடியகழ்வு திணைக்கள பிரதி கட்டுப்பாட்டாளர் இ. எச். ஜி. பிரசங்க, ஒபர் நிறுவன தலைவி செல்வி. சி. சூரியகுமாரி உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.



# வாகன விபத்தில் அருட்தந்தை பலி

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் - அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அடம்பன் நாற்சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அருட்தந்தை ஒருவர் உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை (4) பதிவாகியுள்ளது .

மன்னார் மறை மாவட்டம் , சலேசியன் சபையைச் சேர்ந்த 34 வயதுடைய அருட்தந்தை மரிசால் டிலான் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழ் மறைமாவட்ட குருக்களுக்கான தவக்கால தியானம் மன்னார் மடு தேவாலயத்தில் நடைபெற்றுள்ளதுடன் அதில் கலந்து கொண்டு மோட்டார் சைக்கிளில் திரும்பி வருகையில் எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது .

இதன் போது படுகாயமடைந்த அருட்தந்தையை மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காணி விடுவிப்பு தொடர்பில்

# பாதுகாப்புச் செயலாளரிடம் ஆளுநர் கோரிக்கை

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குனரத்னவை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் , பாதுகாப்பு அமைச்சில் வைத்து செவ்வாய்க்கிழமை (05) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, வடக்கில் பாதுகாப்பு படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை மீள்குடியேற்றம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு விடுவிப்பது தொடர்பில் ஆளுநரினால் பாதுகாப்புச் செயலாளரிடம் எடுத்துக்கூறப்பட்டதற்கமைவாக, காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராய்ந்து விரைவில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தாம் பரிந்துரைகளை அனுப்புவதாக பாதுகாப்புச் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரிடம் உறுதியளித்துள்ளார்.



# தமிழ் நாட்டின் ரஹ்மத் பதிப்பக உயர்மட்டக் குழுவினர் விஜயம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ்வின் அழைப்பின் பேரில் தமிழ் நாட்டின் ரஹ்மத் பதிப்பக உயர்மட்டக் குழுவினர் காத்தான்குடி பூர்வீக நூதனசாலை மற்றும் புதிய காத்தான்குடி அல்-அக்ஸா பெரிய பள்ளிவாசல் போன்றவற்றிற்கு திங்கட்கிழமை (04) விஜயம் மேற்கொண்டுள்ளனர்.





இதன்போது தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், உலகப்புகழ் தமிழ் மொழி அறிவிப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீத் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்துள்ளனர்.

# வீதி விபத்தில் இருவர் காயம்




■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேன பகுதியில் செவ்வாய்க்கிழமை(05) இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அருகில் இருந்த பேருந்து மீது மோதியதில் மோட்டார் சைக்கிள் சாரதியும் பின் இருக்கையில் பயணித்த இளைஞனும் படுகாயமடைந்து நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் எதிர்திசையில் பயணித்த இ.போ.ச பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பீடி இலைகள் மீட்பு





■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - நுரைச்சோலை, இளந்தையடி கடற்பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருதொகை பீடி இலைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

நுரைச்சோலை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடலோர பாதுகாப்பு கடற்படையினரால் இளந்தையடி கடற்பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 111 பார்சல்களை சோதனை செய்த போதே , அதிலிருந்து 3,440 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளது.


இவ்வாறு கடற்படையினரால் மீட்கப்பட்ட பீடி இலைகள் அடங்கிய பார்சல்களும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# அழுகிய நிலையில் முதியவரின் சடலம் மீட்பு

■ க.அகரன்

வவுனியா - ஓமந்தை நாவற்குளம் பகுதியில் அமைந்துள்ள நீர் நிலையில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் செவ்வாய்கிழமை (05) மீட்க்கப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட கற்க்குவாரியாக காணப்பட்ட அந்த பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே பொலிஸார் குறித்த இடத்திற்கு விரைந்து சடலத்தை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



சடலம் அழுகிய நிலையில் உள்ளமையினால் சில தினங்களிற்கு முன்னராகவே குறித்த நபர் இறந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஓமந்தை பொலிஸார் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# ஐ.ம.சவின் நிருவாக செயலாளர் நியமனம்


■ வ.சக்தி



ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நிருவாகச் செயலாளராக மட்டக்களப்பு குருக்கள் மடம் கிராமத்தைச் சேர்ந்த பாக்கியநாதன் ஜோன் கெனத் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவின் ஆலோசனைக்கமைய அக்கட்சியின் பொதுச் செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துமபண்டாரவினால் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.


# சிவராத்திரி நிகழ்வில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் பங்கேற்பு



■ அ.அச்சுதன்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற்ற 3ஆம் நாள் (04.03.2024) சிவராத்திரி நிகழ்வில் தமிழ்நாடு மைலம் பொம்புரம் ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்துகொண்டு ஆன்மீக சொற்பொழிவை வழங்கியுள்ளார்.

கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் கடந்த முதலாம் திகதி முதல் சிவராத்திரி நிகழ்வுகள் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் தொடர்ச்சியாக தினமும் மாலை வேளையில் இடம்பெற்று வருகின்றன.



பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு வருகின்றதுடன், எதிர்வரும் 08ஆம் திகதி சிவராத்திரி தினம் வரை இந்நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் இருவர் கைது

■ ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி, உச்சமுனை கடற்பகுதி ஊடாக சட்டவிரோதமாகக் கொண்டு செல்ல முயற்சித்த பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் சந்தேகநபர்கள் இருவர், கடற்படையினரால் ஞாயிற்றுக்கிழமை (03) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி வன்னிமுந்தல் பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 44 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் .

வடமேற்கு கடற்படை கட்டளையின் கடலோர பாதுகாப்பு கடற்படையினரால் கற்பிட்டி உச்சமுனை கடற்பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு டிங்கி இயந்திர படகுகளை சோதனை செய்த போதே இவ்வாறு 100 மில்லி லீட்டர் அளவுடைய 4,000 பூச்சிக்கொல்லி மருந்து போத்தல் கள்ளும், 10 கிராமுடைய 6,534 பூச்சிக்கொல்லி பக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இரண்டு டிங்கி இயந்திர படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன .

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பூச்சி கொல்லி மருந்து போத்தல்களும், பக்கெட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைத்துள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



# குறைந்தும் குறையாக விலைகள், இன்னும் குறையப் போகும் விலைகள்!

மின்சாரக் கட்டண விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஓரளவு நிவாரணத்தை வழங்குவதாக இது அமைந்தாலும், இந்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு சுமார் ஒன்றறை மாதங்களுக்கு மேலான காலம் தேவைப்பட்டது ஏன் என்பது தெளிவாகவில்லை.

கடந்த காலங்களில் விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்ட போது, அது பற்றிய பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டு சுமார் இரண்டு வார காலத்தினுள்ளேயே விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நாடு முழுவதிலும் தற்போது அதிக வெப்பத்துடனான வறட்சியான வானிலை நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, ஜனவரி மாதத்தின் முற்பகுதியின் பின்னர் பெருமளவான பகுதிகளில் அதிக வீழ்ச்சி பதிவாகவில்லை. இந்நிலையில் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரை இந்த கடும் வெப்பமான வானிலை தொடரும் என வானிலை அவதான நிலையத்தின் அதிகாரிகள் தெரிவித்திருக்கும் நிலையில், வீடுகளில் மின்விசிறிகள், குளிர வைக்கும் சாதனங்களின் பாவனை அதிகரித்த வண்ணமுள்ளது. இதனால் மின்சாரத்தின் பாவனையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கான நீரேந்து பகுதிகளில் போதியளவு நீர் கையிருப்பு இன்மையால், மாற்று மின் உற்பத்திகளில் குறிப்பாக நிலக்கரி மின் உற்பத்தி முறைகளில் அதிகளவு தங்கியிருக்க வேண்டிய நிலை எழுந்துள்ளது.

உண்மையில் இந்த மின்கட்டண விலைக் குறைப்பின் அனுகூலம் மக்களுக்குக் கிடைத்திருக்க வேண்டியது, கடந்த ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையான மூன்று மாத காலப்பகுதியில் நாட்டுக்குக் கிடைத்திருந்த அதிக மழைவீழ்ச்சியின் போதாகும். அக்காலப் பகுதியில் மக்கள் பயன்படுத்திய மின்சாரத்துக்கு உயர்ந்த தொகையைச் செலுத்திவிட்டு, தற்போது மின்பிறப்பாக்கலுக்கு செலவு உயர்வாகக் காணப்படும் சூழலில் இந்த விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது, மீண்டும் மக்களின் மீது ஒரு வித சுமையை ஏற்படுத்தும் விடயமாக அமைந்துள்ளதா என எண்ணத் தோன்றுகின்றது.

ரூபாய்க்கு நிரகான டொலரின் மதிப்பு வீழ்ச்சியடைந்து வரும் சாதகமான சூழலைப் பயன்படுத்தி நிலக்கரி கொள்வனவில் ஏற்படும் செலவை ஓரளவு கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்தாலும், முழுமையான பயனைப் பெற்றுக்கொடுக்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

அதுபோன்று மின்சார கட்டண உயர்வைக் காரணம் காண்பித்து, நீர் விநியோகத்துக்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டிருந்தது. தற்போது மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நீர் விநியோகக் கட்டணமும் குறைக்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

தேர்தல் நெருங்கி வரும் காலம் என்பதால், எதிர்வரும் மாதங்களில் இது போன்ற மேலும் விலைக்குறைப்புகள் பற்றிய அறிவிப்புகள் தொடர்ந்து வரும், தேர்தல் முடிந்த பின்னர், மீண்டும் குறைக்கப்பட்டதை விடப் பல மடங்கு அதிகரிக்கப்படும். இம்முறையும் இந்த வித்தைகளுக்கு வாக்காளர் மக்கள் ஏமாறுவார்களா என்பது சந்தேகம் தான்.

மக்கள் பெருமளவில் பயன்படுத்தும் 92 ஒக்டேன், ஒடோ டீசல் விலை இம்முறை விலைச்சூத்திரத்துக்கமைய குறைக்கப்படவில்லை. அடுத்த மாதம் இது பெருமளவில் குறைக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு, ரமழான், உயிர்த்த ஞாயிறு போன்ற பண்டிகைகளைக் கொண்டாடுவதற்காக இந்த விலைக்குறைப்புகளை அரசாங்கம் வழங்கும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk








## வாழ்வியல் தரிசனம்

வேண்டுமென்றே ஒருவர் நெஞ்சத்தைப் படுமோசமாக வருத்தினாலும், அதைத் தனது சிந்தையில் ஏற்காமல் உதறுபவர்கள், உறுதியான வீரர்கள் என்றே கருதப்படுவார்கள்.

இல்லாத பழியை ஏற்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு சின்ன விடயத்துக்கே மனம் பதறுபவர்கள், மிகப் பெரிய சதிகளுக்கு அச்சமின்றி முகம் கொடுப்பது சந்தேகமானதுதான். பழிசுமத்துவது சிலருக்கு, எளிதான காரியமாகவே இருக்கிறது.

தவறான வழியில் ஒருவரைப் வதைக்க எண்ணுவதுதான் பிரதிபலன், எய்தவரை மக்கள் தூக்கி எறிந்துவிடுவார்கள். தவறுகளை, எவரும் எப்படியும் செய்யலாம் என எண்ணுபவர்களை, இந்தச் சமூகம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்காது. ஒரு சிலரினால், பலரின் நிம்மதியைக் குலைக்க முடியுமா?

எவருக்கும் எவரையும் தண்டிப்பதற்கும் அவமானப்படுத்துவதற்கும் உரிமை கிடையாது. மனிதர்களுக்கு எல்லா எதிர்ப்புகள், துரோகங்கள், அழிவுகள் மத்தியில் வாழவேண்டி இருக்கிறது. இந்த அனுபவங்களால் கிடைப்பது தெளவும் பெருவெற்றியும் என்பதே நிதர்சனம். இந்தச் சமூகம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்காது. ஒரு சிலரினால், பலரின் நிம்மதியைக் குலைக்க முடியுமா?

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

# அரச துறையினர் மக்களுக்கு வழங்கும் குப்பி விளக்குத் தீரவுகள்



எம்.எஸ்.எம்.ஐயூப்

பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த மக்களைப் பற்றியும் மின்சாரக் கட்டனத்தை செலுத்த முடியாது அவதியுறும் மக்களைப் பற்றியும் மிக மோசமான சில கருத்துக்களை வெளியிட்ட இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நொயெல் பிரியந்த அப்பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

அப்பதவியிலிருந்து அவர் இராஜனாமாச் செய்துள்ளார் என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அறிவித்த போதிலும் உண்மையிலேயே அது ஒரு பதவி என்தைப் பார்க்கிலும் ஒரு பொறுப்பு மட்டுமேயாகும். எனவே அவர் அந்த நிலையிலிருந்து விலகினாலும் அவருக்கு எந்தவிதமான நட்டமும் இல்லை. அவர் இன்னமும் மின்சார சபையின் பொறியியலாளராகக் கடமையாற்றுகிறார்.

அவர் ஊடகப் பேச்சாளர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து விட்டார் என்ற செய்தியோடு அவரது அவதூறான கருத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்கள் சற்று அமைதியடைந்து இருப்பார்கள். அவ்வளவு தான்.

கடந்த வாரம் தெரண தொலைக்காட்சியில் நடைபெற்ற நேர்காணல் ஒன்றின்போது, அவரோடு உரையாடிய ஊடகவியலாளர் மின்சாரக் கட்டண உயர்வால் மக்கள் பாதிக்கப்படுவதை விவரித்தார். கடந்த இரண்டு வருடங்களில் சுமார் ஐந்து மடங்காக மின்சாரக் கட்டணம் உயர்ந்துள்ளதாகக் கூறிய அவர் அதன் காரணமாகப் பலர் அக்கட்டணத்தை செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு அதன்காரணமாக அவர்களது வீடுகளில் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறு மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்ட ஒரு வீட்டில் தந்தை தமது பிள்ளைகள் படிப்பதற்காக அடுத்த வீட்டிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சியின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாகவும் மக்கள் அவ்வாறு கடும் கஷ்டத்தை எதிர்நோக்கியிருக்கும் நிலையில் மின்கட்டணத்தை மக்கள் தாங்கிக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஏன் குறைக்க முடியாது என்று அந்த நேர்காணலின் போது ஊடகவியலாளர் மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரிடம் கேட்டார்.

மின்சாரம் கட்டாயம் தேவையா? குப்பி விளக்கில் படிக்க முடியாதா? என்று அப்பேச்சாளர் அதற்கு அளித்த பதிலில் திருப்பிக் கேள்வி எழுப்பினார். தோட்டப்பகுதி மக்கள் மின்சாரக் கட்டன உயர்வால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று ஊடகவியலாளர் கூறியதற்குப் பதிலளித்த அவர் அம்மக்களின் கஷ்டங்களுக்கு அவர்களின் குடிப் பழக்கமே முக்கிய காரணம் என்றும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் அவர்கள் எல்லோரும் போதையில் இருக்கிறார்கள் என்றும் கூறினார்.

மின் கட்டணத்தைச் செலுத்த முடியாவிட்டால் குப்பி விளக்கு ஒளியில் மாணவர்கள் கல்வி கற்க வேண்டும் என்ற நொயெல் பிரயந்தவின் ஆலோசனைக்கு உடனடியாகவே சமூக வலைத்தளங்களில் விமர்சனங்கள் மலைப்போலக் குவிந்தன. தனிப்பட்ட முறையில் அவரையும் எதேச்சாதிகாரமாக மின்கட்டணத்தை அதிகரித்துள்ள மின்சார சபையையும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவையும் மிக மோசமாகத் தாக்கி பலர் சமூக வலைத்தளங்களில் கருத்து வெளியிடப்பட்ட இருந்தனர்.

அவர் மலையக மக்களைப் பற்றி வெளியிட்ட கருத்தை எதிர்த்து உடனடியாகவே நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான தமது ஒ கணக்கில் (முன்னைய டுவிட்டர் கணக்கில்) ஒரு பதிவை வெளியிட்டு இருந்தார். மின்சார சபையின் பேச்சாளரின் கருத்து அனுதாபமற்றதும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான கருத்தாகும் என்று அவர் குறிப்பிட்டு இருந்தார். அதற்கு உடனே தமது ஒ கணக்கில் பதிலளித்த மின்சாரத்துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர தாம் அமைச்சர் தொண்டமானின் கருத்தை முழுமையாகவே ஏற்றுக்கொள்வதாகவும் மின்சார சபையின் பேச்சாளர் தமது கருத்துக்குப் பொறுப்பை ஏற்று அப்பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார் என்றும் தெரிவித்து இருந்தார்.

பெரும்பாலான குடும்பங்களின் வருமானம் குறைந்துள்ளது. அவர்கள் அன்றாட உணவுக்கே தடுமாறிக்கொண்டு இருக்கும் நிலையிலேயே மின்சார சபை இரண்டு முறை மின்கட்டணத்தை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பத்து இலட்சத்துக்கும் மேலான மின் பாவனையாளர்கள் மின்கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களது மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாக மின்சக்தி அமைச்சரே அண்மையில் பாராளுமன்றத்தில் கூறினார். நாட்டில் 51 இலட்சம் குடும்பங்களே இருக்கின்றன. அதில் ஐந்தில் ஒரு பகுதியினரின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது என்றால் மின்சார சபையும் அமைச்சரும் நிலைமையை புரிந்துகொள்ள அதுவே போதுமானதாகும். அவர்களது பிள்ளைகள் குப்பி விளக்கு ஒளியில் படிக்க வேண்டும் என்பது எவ்வளவு குரூரமான பரிகாசம்?

மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்ட பல குடும்பங்கள் ஏற்கெனவே குப்பி விளக்கைத் தான் பாவிக்க வேண்டும். ஆனால், விந்தை என்னவென்றால் நாட்டில் அனைவருக்கும் மின்சாரத்தை வழங்கத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டிய மின்சார சபையின் பிரதிநிதி ஒருவர் குப்பி விளக்கு பாவனையை ஊக்குவிப்பதேயாகும்.

எனினும் நொயெல் பிரியந்தவை ஒரு வகையில் பாராட்டத் தான் வேண்டும். ஏனெனில் அவர் தமது உணர்வுகளை மறைக்காமல் வெளியிட்டுள்ளார். மின்சார சபையிலும் மின்சக்தி அமைச்சிலும் அரசாங்கத்திலும் மேலும் பலர் இவ்வாறே நினைத்தரிருக்கலாம். ஆனால், அவர்கள் ஒருவரும் இது போன்று தமது உணர்வுகளை வெளியிடவில்லை. அல்லது அவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனவே, மக்களுக்கான கடமை உணர்வு இல்லாமைக்கும் மக்கள் மீதான பரிவு இல்லாமைக்கும் பிரியந்தவை மட்டும் குறைகூற முடியாது.

அப்பரிவின்மையும் கடமை உணர்வின்மையும் குறிப்பிட்ட ஒருவரிடமோ அல்லது குறிப்பிட்ட ஒரு குழுவினரிடமோ உள்ள பண்பு அல்ல. அது வர்த்தகர்களிடமும் அரச துறையில் பலரிடமும் எப்போதும் காணக்கூடிய ஒன்றாகும். உதாரணமாக அண்மையில் திடீரென சுமார் ஆறு மடங்காக மரக்கறி விலை அதிகரித்தமைக்கு உற்பத்திச் செலவு காரணமாகவில்லை. உற்பத்திச் செலவில் எவ்வித மாற்றமும் இல்லாத நிலையிலேயே இடைத்தரகர்கள் அவ்வாறு விலையை அதிகரித்தனர். மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற சில நிறுவனங்கள் ஏனைய நிறுவனங்களைப் பார்க்கிலும் தமது ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பாரியளவில் அதிக சம்பளத்தை வழங்குகின்றன. மக்களிடம் அறவிடப்படும் பணத்தில் பாரியளவில் இலாபமீட்டும் அந்நிறுவனங்கள் தாம் மக்கள் மீது விதிக்கும் விலையைச் செலுத்த முடியாது அம்மக்கள் தவிக்கும்போது குப்பி விளக்கைப் பாவிக்குமாறு கூறுவது அந்த பரிவின்மையின் உச்சமாகவே கருத வேண்டியுள்ளது.

அண்மையில் தொடர்ச்சியாக இரண்டு முறை பாரியளவில் கட்டணத்தை அதிகரித்தும் கடந்த வருட இறுதி நான்கு மாதங்களில் நீரேந்து பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்த மழையின் காரணமாகவும் மின்சார சபை பாரிய இலாபத்தை அடைந்திருக்கிறது. அந்த கட்டன அதிகரிப்பு 480 வீதம் என மின்சார சபையின் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவரான ரஞ்சன் ஜயலால் கூறுகிறார். அதன் படி கடந்த ஜனவரி மாதம் முதல் கட்டணம் குறைக்கப்படும் என அமைச்சரும் மின்சார சபையும் அறிவித்திருந்தது.

ஆனால் ஜனவரி பெப்ரவரி ஆகிய இரு மாதங்களிலும் அந்த விலை குறைப்ப இடம்பெறவில்லை. இதனையடுத்து, 3 வீதத்தால் கட்டணத்தைக் குறைக்கவே மின்சார சபை முதலில் முன்வந்தது. 480 வீதத்தால் கட்டணத்தை அதிகரித்தவர்கள் 3 சத வீதத்தால் கட்டணத்தைக் குறைப்பதாக இருந்தால் அவர்கள் மக்கள் மீது எவ்வளவு பரிவு கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. இறுதியில் பலவேறு விமர்சனங்களின் காரணமாக இப்போது 21 சத வீதத்தால் மின் கட்டணத்தைக் குறைப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

மத்திய வங்கியின் அதிகாரிகளினது சம்பள அதிகரிப்பும் மக்கள் மீதான அரச துறையினரின் பரிவின்மையையே காட்டுகிறது. பொதுவாக அந்த சம்பள உயர்வு 70 வீதமானது என்று கூறப்பட்ட போதிலும் சில அதிகாரிகளின் மாதச் சம்பளம் 9 இலட்சத்திலிருந்து 17 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு அரசியல்வாதிகள் மட்டுமன்றி மத்திய வங்கியும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று அண்மையில் பொருளாதார நெருக்கடி தொடர்பான வழக்கொன்றில்; உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலும் கூறப்பட்டது. அவ்வாறிருக்க மத்திய வங்கி அதிகாரிகள் இவ்வாறு தமது சம்பளத்தை அதிகரித்துக் கொள்வது எவ்வகையிலும் நியாயமற்றதாகும். அவர்கள் ஏனைய துறைகளில் சிக்கனத்தை வலியுறுத்துவதானது மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரின் குப்பி விளக்குத் தீர்வைப் போலானதாகும். பொதுவாக எடுத்துக் கொண்டால் அரசியல்வாதிகளிடமும் அரசதுறை உயர் அதிகாரிகளிடமும் சகலவற்றுக்கும் குப்பி விளக்கு தீர்வுகளை இருக்கின்றன.

## கடிதங்கள்

# யானைகள் அட்டகாசம்!



கிளிநொச்சி - அக்கராயன் பிரதேசத்தின் எல்லையோர கிராமமான கெங்காதரன் குடியிருப்பு பகுதியில் யானைகள் புகுந்து தென்னைகளையும் இதர பயிர்களையும் அழித்துள்ளன.

பெருமளவான காட்டு யானைகள் குறித்த குடியிருப்பு பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிக்குள் புகுந்து பயன் தரும் நிலையில் உள்ள தென்னை மரங்களை அழித்து வருகின்றதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

யானையின் இத்தாக்குதல் உயிர்ச் சேதம் வரை தொடரலாம் எனவும் கிராமத்து இளைஞர்கள் யானை வெடிகளுடன் காட்டின் எல்லையோரத்தில் விழித்திருக்க நேரிடுகிறது. தமது பகுதியிலுள்ள பெருமளவானோர் தொழிற்சாலைக்கு அதிகாலை வேலைக்குச் செல்கின்றனர் எனவே வனவள திணைக்களத்தினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# எம்மை வாழ விடுங்கள்...

நாகேஸ்வரன் மிரேகா

சர்வதேச மகளிர் தினம் ஆண்டு தோறும் மார்ச் 8ஆம் திகதி பெண்களின் சாதனைகளை கௌரவிக்கவும் உலக அளவில் பாலின சமத்துவத்திற்காக வாதிடவும் கொண்டாடப்படுகிறது.

இந்நாளின் தோற்றம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்களின் உரிமைகள் மற்றும் வாக்குரிமைக்கான இயக்கங்களில் இருந்தும் அறியப்படுகிறது. 1908ஆம் ஆண்டில் பதினையாயிரம் பெண்கள் நியூயோர்க் நகரத்தில் குறுகிய வேலை நேரம் சிறந்த ஊதியம் மற்றும் வாக்குரிமை ஆகியவற்றைக் கோரி அணிவகுத்துச் சென்றனர் அமெரிக்காவின் சோசலிஸ்ட் கட்சியால் அறிவிக்கப்பட்டபடி 1909ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி அமெரிக்காவில் முதல் தேசிய மகளிர் தினம் அனுட்டிக்கப்பட்டது. அடுத்த ஆண்டே இந்த யோசனை சர்வதேச அளவில் பரவி பிரபல ஜேர்மன் மார்க்சிஸ்ட் கோட்பாட்டாளரான கிளாரா ஜெட்கின் 1910ஆம் ஆண்டு கோபன்கேகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டில் சர்வதேச மகளிர் தினம் பற்றிய யோசனையை முன் வைத்தார். இந்த முன்மொழிவு 14 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 100க்கும் மேற்பட்ட பெண்களிடமிருந்து ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த வகையில் முதல் சர்வதேச மகளிர் தினம் மார்ச் 19 திகதி 1911 அன்று கொண்டாடப்பட்டது. ஐரோப்பா முழுவதும் மில்லியன் கணக்கான ஆண்களும் பெண்களும் பெண்களின் வேலை, வாக்களிப்பு மற்றும் பொது பதவியில் இருப்பதற்கான உரிமைகளுக்காக அணிதிரண்டனர். அடுத்தடுத்து ஆண்டுகளில் உலகெங்கிலும் பேரணிகள், எதிர்ப்புகள் மற்றும் நிகழ்வுகள் நடத்தப்பட்டதன் மூலம் பெண்கள் உரிமைகள் இயக்கத்தின் மையப் புள்ளியாகச் சர்வதேச மகளிர் தினம் ஆனது. இருபதாம் நூற்றாண்டு முழுவதும் பெண்கள் சர்வதேச மகளிர் தினத்தை மாற்றத்திற்கான ஒரு தளமாகத் தொடர்ந்து பயன்படுத்தினர். 1917களில் ரஷ்யப் போரின் உச்சக்கட்டம் பஞ்சம் பசி, பட்டினி ஆடைத் தொழிற்சாலையில் உழைக்கும் பெண்கள் தமது பச்சியங்குழந்தைகளை கையில் இடுக்கிய வண்ணம் எங்களது பிள்ளைகளுக்கு சோறு வேண்டும்.

அவர்கள் பசியால் துடிக்கிறார்கள் பேச்சுவார்த்தை நடத்தியது போதும், மன்னராட்சி ஒழிக!, எங்களது பிள்ளைகளுக்கு அரைதுண்டு ரொட்டியாவது வேண்டும் வெளியே வாருங்கள் என கோசமிட்டுக்கொண்டே நடந்து சென்றார்கள் இரு தினங்களில் 1,28,000 ஆண்களும் பெண்களுமாக அந்த நகர்வலம் அதிகரித்து யுத்தமும் நிறுத்தப்பட்டது அந்நாளே மார்ச் 8ஆம் திகதி. பெண்கள் தனித்து ஆரம்பித்த போராட்டத்தின் வெற்றி நாளையே மகளிர் தினமாக நாம் நினைவு கூருகிறோம். 1975ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை மார்ச் எட்டாம் திகதியைச் சர்வதேச மகளிர் தினமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.

அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருள்களுடன் உலகளவில் இந்த சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு மகளிர் தினமும் வெறுமனே களியாட்ட நிகழ்வோ, பொழுதுபோக்கு நிகழ்வோ அல்ல. இது பாலின சமத்துவத்தை நோக்கிய முன்னேற்றம் மற்றும் இன்னும் செய்யவேண்டிய பணிகளை நினைவூட்டுகின்றது.

அனைத்து துறைகளிலும் பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுவதற்கும் , பெண்களின் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும் அரசியல் பிரதிநிதித்துவத்திற்காகப் போராடுவது முதல் சவாலான பாலின நிலைப்பாடுகள் வரை சர்வதேச மகளிர் தினம் உலகெங்கிலும் உள்ள மக்களை மிகவும் சமமான மற்றும் நியாயமான சமூகத்திற்காகப் பாடுபடத் தொடர்ந்து ஊக்குவிக்கிறது.

அந்த வகையில், ஒவ்வொரு வருடமும் UN ஆல் ஒவ்வொரு கருப்பொருளில் இவ் சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால், UN தேர்ந்தெடுக்கும் கருப்பொருள் எந்நாட்டிற்கும் என் நாட்டில் உள்ள என்னைப் போன்ற பெண்களுக்கும் பொருத்தமற்றது. நாடு விட்டு கடல் கடந்து நிற்கும் UN பெண்களுக்கோ

அந்நாட்டிற்கோ தெரியாது என் நாட்டுப் பெண்களின் நிலையும் வலியும். இலங்கை திருநாட்டில் வாழும் சிவில் செயற்பாட்டாளராகவும் பாதிக்கப்பட்ட பெண்ணின் பால் நின்று பிரச்சினையைப் பகுத்தறியும் ஒரு பெண்ணியவாதியாகவும் இந்த வருடச் சர்வதேச மகளிர் தினத்தில் தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும்

> **இவ்வருட கருப்பொருள் பெண்களில் ‘முதலீடு செய்யுங்கள் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துங்கள்’ என ஐ.நா சபையுடன் இணைந்து கொண்டாடுங்கள் இந்த மகளிர் தினத்தை என்கிறது சர்வதேசம்**

நான் உரக்கச் சொல்வது என்னவோ

எம்மை வாழ விடுங்கள் என்பதுவே யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் உருண்டோடி விட்டது. 1948இல் இருந்து சுதந்திரம் கிடைத்து 76 வருடங்களை வெறுமனே கானல் நீராகவே சுதந்திரத்தைப் பெண்கள் கடந்துவிட்டனர். சர்வதேசம் சொல்கிறது பெண்களுக்கு இலங்கையில் பிரச்சனை இல்லை, யுத்தத்தின் வடுக்கள் நீங்கி விட்டது, அனைத்து பெண்களும் சமூக மயப்படுத்தப்பட்டு விட்டனர் என்று இலங்கை அரசின் திருப்திப்படுத்தல் செயல்முறையில் சர்வதேசத்தின் கண்கள் கட்டப்பட்டுக்

கிடக்கின்றதாகவே நாம் உணர்கிறோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பெண்களின் அவலநிலை இன்று வரை நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது.

யுத்தத்தில் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட பெண்கள் இன்றும் வீதியில் எங்கே எனது உறவு? பதில் சொல் இலங்கை அரசே, பொறுப்புக்குக் கூறு இலங்கை நாடே, எங்கே எனது கணவன்? எங்கே எனது தந்தை? என பதாதையுடன் வீதியில் இறங்கி போராடுகிறாள். ஒட்டுமொத்த வாழ்க்கையையும் இழந்து இழந்ததைக் கேட்கவும் திராணியற்றவளாகக் குரல்வளை நசுக்கப்பட்டு முடங்கிப்போய் இருக்கிறாள். வீதியில் இறங்கிப் போராடியும் தனக்கான உரிமையைப் பெறமுடியவில்லை.

இது ஒரு புறமிருக்க முன்னாள் போராளிப் பெண்கள் சமூக மயப்படுத்தப்பட்டு விட்டார்கள் என கூறி சர்வதேசத்தைத் திருப்திப்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசு தீவிரமாகச் செயல்படும் இதேவேளை, தொடர்பு லனாய்வுத்துறையினரின் அச்சுறுத்தல்கள், பொது நிகழ்வுகளிலோ கூட்டங்களிலோ பங்கேற்க முடியாத சூழல், தவறிக் கலந்து கொண்டால்கூட, பயங்கரவாதத்தைத் தூண்டும் முயற்சியா? அல்லது ஏதேனும் குழுக்களின் மீள் உருவாக்கமா? என புலனாய்வுத் துறையினரின் தொடர் அச்சுறுத்தல்கள். வேலை நிமித்தம் வெளியூர் சென்றாலோ அல்லது சென்ற இடத்தில் காலதாமதம் ஆனாலோ அயலவரிடம் விசாரணை என அத்துமீறும் அராஜகங்கள் இப்படி எண்ணில் அடங்காத துயரங்கள்.

ஏற்கெனவே யுத்த காயங்களும் சன்னத்துண்டுகளும் உடலை வருத்தும். அதேவேளை, மொத்த உளவியலையும் சுக்குநூறாக உடைத்து எறிகிறது இவ்வாறான தொடர் அச்சுறுத்தல்கள் நடந்த படுகொலைகளில் கணவனை இழந்தவர்கள், தந்தையை இழந்தவர்கள் நீதிமன்றம் நாடியும் நிஜத்தை நிரூபிக்கும் முடியாமல் வலுவிழந்து நிற்கிறார்கள். ஆணற்ற குடும்பத்தில் உடலால் ஆணாகவும், உள்ளத்தால் பெண்ணாகவும் மாறி மாறி குடும்ப சுமையைச் சுமந்து நிற்கும் பெண்கள், பெண் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெண்கள், படுகொலை செய்யப்பட்டு உறவுகளை இழந்த பெண்கள், சிவில் செயற்பாட்டாளர்களில் பெண்கள், காணிகளை இழந்து வாழ்வாதாரமற்று தவிக்கும் பெண்கள் இன்று பன்முகப்படுத்தப்பட்ட பிரச்சினையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்காக யார் பேசினாலும் அவர்களையும் இந்த அரசு தீவிரவாதியாகவே முத்திரை குத்துகிறது.

இருந்தும் அதையும் மீறி அவர்களுக்கு ஆதரவாக நிற்கும் சிவில் செயற்பாட்டாளர்கள், பெண் பிரதிநிதிகளுக்கு ஏன்? எதற்கு? என தெரியாமலே நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. படுகொலை செய்யப்பட்ட தன் கணவனுக்கு நினைவேந்தல் செய்த செய்யத் தடை உத்தரவு, காணாமல் ஆக்கப்பட்ட கணவனையும் பிள்ளையையும் தேடினால் தடை உத்தரவு, ஏன்? இத்தனைக்கும் கடவுளை வணங்கும் கூட்டத்தில் ஒரு முன்னாள் போராளி நின்றால் உச்சக்கட்ட விசாரணையும் தடையுத்தரவும், அவளும் என்னைப்போல ஒரு பெண்தானே என ஒருத்தி சேர்ந்து நின்றால் அவளுக்கும் குறைந்தது மூன்று மணிநேர விசாரணையும் தடை உத்தரவு இதில் எங்கிருக்கிறது சுதந்திரம்? எதில் இருக்கிறது சுதந்திரம்? சமூகமயமாக்கல் என்பதே கண்கட்டு வித்தையும் தீராத வலியைத் தருகிறது.

ஒவ்வொருவரும் பதாதை ஏந்தி போராடிப் போராடி ரணமானது இரு கால்கள் மட்டுமல்ல, மனதும் தான் ஆனாலும் ஓயமாட்டோம். எங்கள் பிரச்சினைகளைத் தேசமும், சர்வதேசமும் தீர்த்துத் தரும் வரை ஓயமாட்டோம் என கணீர் என்ற குரலில் சொல்லுவோம், இந்த சர்வதேச மகளிர் தினத்தில் எங்களை வாழ விடுங்கள்!

இத்தனை குற்றங்கள் நிகழும் இந்நாட்டில் சீடோ சமவாயம் செயற்படுத்தப்படுகிறது என நம்பும் மூடர்களே!

என்னவென்று கூறுவது? அடிப்படை உரிமைகளை இழந்து தவிக்கும் இந்நாட்டுப் பெண்களின் குரலுக்குச் சற்று செவிசாய் சர்வதேசமே!

இவ்வருட கருப்பொருள் பெண்களில் ‘முதலீடு செய்யுங்கள் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துங்கள்’ என ஐ.நா சபையுடன் இணைந்து கொண்டாடுங்கள் இந்த மகளிர் தினத்தை என்கிறது சர்வதேசம். எங்கள் கருத்து சற்று மாறுபட்டது.

முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த முதல் எங்களை முன்னேற விடுங்கள், வாழவிடுங்கள் என்கிறோம் தகுதி இருந்தும் பெண்ணானதால் தரமான இடங்களில் அங்கீகாரமும் அமைவதில்லை அரசியலிலும் சரி ஆட்சியிலும் சரி முன்னேற நாங்கள் தயார். எங்களை வாழ விடுங்கள்!



# விடியலை நோக்கிய நடை

றிஸ்னா அசாருதீன்
யாழ்ப்பாணபல்கலைக்கழகம்
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை

மனித வாழ்வைப் பொறுத்தவரையில் அது இலக்குகள், ஆசைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவற்றால் சூழப்பட்டதொரு பெரிய பரப்பாகக் காணப்படுகிறது. தன்னுடைய இலக்கினை அடையவேண்டும் என்ற அவாவுடன் ஒவ்வொருவரும், ஒவ்வொருநாளும் பயணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பெரும்பாலும் அப்பயணமானது மனிதவாழ்வின் அத்தியவசியத் தேவைகளான உணவு,உடை,உறையுள் போன்றவற்றை முதன்மைப்படுத்தியதாகவும் இருந்துவருகின்றது. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான அத்தியவசிய தேவைகளைப் போலவே மனித வாழ்வில் பயணங்களும் இன்றியமையாத ஒரு அம்சமாக மாறிவிட்டது. இதனால் தான் மனித வாழ்வில் பயணங்கள் என்றும் ஓய்வது இல்லை என்று சொல்வார்கள். நாம் அன்றாடம் எத்தனையோ பயணங்களை மேற்கொள்கிறோம். எவ்வளவோ இடங்களுக்குச் செல்கிறோம். எத்தனையோ மனிதர்களைச் சந்திக்கின்றோம். அவர்களுள் சிலர் வாழ்வையேபயணமாகக்கொண்டுசுடும் வெயிலிலும், வீதியோரங்களிலும் துவண்டு கிடக்கும் பாதையோர யாசகர்களைப் பற்றிச் சிந்தித்தது உண்டா?

அவர்களின் ஒவ்வொரு நடையும் ஏதோ ஒன்றுக்காகத் தினமும் ஓயாது சென்று கொண்டுதான் இருக்கின்றன. அப் பயணத்தில் அவர்கள் சலிப்புற்றாலோ, துவண்டு கிடந்தாலோ அன்று அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலைதான் ஏற்படும்.

அவர்களைப் பற்றியும் நாம் ஆழமாகச் சிந்திக்கவும் செயலாற்றவும் கடமைப்பட்டுள்ளோம். அவ்வாறான நிலைமையில் எம்மிடம் வரக் கூடிய சிலருடன் நாம் கோபத்துடன் கதைக்கின்றோம். எமக்கு ஏதேனும் சங்கடமான நிலைமைகளின்போது, அவர்களைப் புறக்கணித்து தீய வார்த்தைப் பிரயோகங்களால் அவர்களது மனதைப் புண்படுத்தி விடுகின்றோம். இன்னும் சிலர் எம்மிடையே வந்து ஏதேனும் தமக்குக் கொடுக்கும் படிகேட்டால் நாம் அவற்றைக் கவனத்தில் எடுக்காது மிக சுலபமாகக் கடந்து செல்கிறோம்.

அவர்களும் எம்மைப்போன்ற மனிதர்களே தவிர, வேறு அல்லர் என்பதும், எமக்கு இருக்கக்கூடிய அதே உணர்வுகளோடு தான் அவர்களும் இறைவனால் படைக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் எம்மில் சிலரது அறிவிற்கு எட்டாத ஒரு விடயமாக இருந்து வருகிறது.

கிடைக்கக்கூடிய இடங்களைத் தாராளமாய் ஏற்றுக்கொண்டு தலை வைத்து உறங்கும் பக்குவமும், எதுநேர்ந்தாலும் பரவா இல்லைஎன்றுநினைத்தபடிநிம்மதி இன்றி உயிரைக் கைகளில் பிடித்துக்கொண்டுகழியும் இராப் பொழுதுகளும் விடியலின் வருகைக்காய் ஏங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. கிடைக்கும் கொஞ்ச உணவில் தன் வயிற்றுப் பசியை போக்குவதா? “அம்மா! பசிக்கிறது “ என்று அழுது கொண்டிருக்கும் தன் குழந்தையின் கண்ணீர் துடைப்பதா? என்று தவித்தபடி முழுவதுமாய் குழந்தையின் கண்ணீரை மட்டும் துடைத்துக் கொண்டுதன் வயிற்றை வெறுமையாய் வைக்கும் உள்ளங்களும் அவர்களுக்குள் இருக்கத்தான் செய்கின்றன. இவர்கள் பற்றி அக்கறை கொள்ளும் உள்ளங்கள் எம்மில் எத்தனைப்பேர் இருக்கிறார்கள்?? சூழ்நிலைகளைச் சகித்துக் கொண்டு சுக துக்கங்களை ஏற்றுக்கொண்டுமனம் நிறையாவிடினும்,வயிற்றுப் பசிதீரவேண்டும் என்றமனஆதங்கத்துடன் அவர்களது இருள் சூழ்ந்த வாழ்வு சுழன்று கொண்டுதான் இருக்கிறது.

தட்டில் பத்து ரூபாயேனும் போடக்கூடிய தனவந்தர்களின் பிறந்தநாள் எப்போது வரும் என்றுபார்த்துக்கொண்டிருக்கும் அளவிற்கு அவர்களின் ஆசைகளும் ஏக்கங்களும் விடியலைநோக்கி இன்றும் நடைபோட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

> **பல கனவுகள், ஆசைகள் சுமந்து வாழும் அவர்களது வாழ்வில் இருள் நீங்கி, விடியல் பிறக்க நாம் அவர்களுக்கு எம்மால் இயன்றளவு கொடுத்து உதவுவது என்பது எம்மை சகல தீய சக்திகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளப் பக்கபலமாய் இருக்கும்**

சுருங்கிய முகமும், நடுநடுங்கிக் கொண்டிருக்கும் கைகளும், கலங்கிய கண்களுமே அவர்கள் யார் என்பதனை எமக்கு அடையாளப்படுத்தி விடுகின்றன. அவர்கள் தம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொருவரும், ஏதும் கடுமையாகச் சொல்லி விடுவார்களோ? என்ற ஏக்கத்துடனேயே ஒவ்வொரு நாளையும் கடந்து செல்கிறார்கள். உண்மையில் அவர்களை எமது சமூகம் ஏதோ ஒருவகையில் புறந்தள்ளிக் கொண்டுதான் இருக்கிறது. ஏதோ ஒரு வகையில் நாம் அவர்கள் மத்தியில் எதிரிகளாகத் தான் நடந்து கொள்கிறோம். அவர்களும் எம் போன்ற மனிதர்களே தவிர வேறுயாரும் இல்லை. அவர்கள் மத்தியில் பல்வேறு திறமைகளையும் முடக்கிக்கொண்டு சாதிக்கத் துடிப்பவர்களும் அவர்கள் மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆசைகளும், ஏக்கங்களும் நிறைந்த அவர்களது இருள் சூழ்ந்த வாழ்வு, எப்போதுதான் விடியும்? என்பது கேள்விக்குறியே!

பணம் பணம் என்று நேரம் காலம் பாராது ஓடிக்கொண்டிருக்கும் இந்த இயந்திரமயமான உலகில், வயிறு நிறைய ஒரு பிடி சோறு கிடைத்தால் போதும் என்று எண்ணக்கூடிய அவர்கள் மத்தியில், எமது சமூகம் எங்கேயுள்ளது. நிரந்தரமே இல்லாத இந்த உலக வாழ்வில் நாம் மரணித்த பிறகு எதனை யுமேஎடுத்துச் செல்லப் போவது இல்லை. மாறாகஒருமனிதனுக்குக் கொடுக்கும் கொடையும், நல்லகாரியங்களுமே இறுதியாகஎமக்கு கை கொடுக்கும்.

“அம்மா” என்ற அவர்களின் வார்த்தைக்குப் பின்னால் ஆயிரம் அர்த்தங்கள் மறைந்து இருக்கின்றன. வயிற்றிலும், கைகளிலும் குழந்தைகளைச் சுமந்து கொண்டு வெயில், மழை பாராது, வீதி ஓரங்களிலும், பொது இடங்களிலும் ஒரு கைப்பிடி சோற்றுக்காய் பெண்கள் தள்ளாடித் திரிவதனையும் பார்க்க உள்ளத்தில் ஏதோ ஒரு பிணி ஆட்கொண்டதுபோலத் தோன்றுகிறது. உச்சிவெயில் நேரங்களில் காலில் பாதணிகள் கூட அணியாத வண்ணம் சுடு மணலிலும், வீதிகளிலும் அவர்களின் கால் தடம் பதியாத இடம் எங்குதான் உள்ளது? அடுத்த நபர்களைத் தன்னோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்களுக்கு எழக்கூடிய மனவலியை வார்த்தைகளால் சொல்லி விடமுடியாது. பத்து மாதங்கள் சுமந்து தாம் பெற்றுவளர்த்த பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்களாகவும், குடும்பப் பின்னணியால் புறந்தள்ளி ஒதுக்கப்பட்டவர்களாகவும், போரில் பாதிக்கப்பட்டவர்களாகவும், அகதிகளாக இடம்பெயர்ந்து வந்தவர்களாகவும் தமது வாழ்நாளை நிம்மதி இன்றிக் கழிக்கும் இவர்கள் கடவுளிடம் கேட்டுப் பெற்ற வரமா இது?

ஆசைகளைத் தம்முள் அடக்கிக்கொண்டு கொடுப்பதைக் கைகள் ஏந்தி வாங்கிக்கொண்டு நடைபோட ஆரம்பிக்கிறது. அவர்களது வாழ்வு. தமது ஆசைகள், கனவுகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற வார்த்தைக்கு அவர்கள் வாழ்வில் ஒரு துளியேனும் இடமே இல்லாமல் போய் விடுகிறது. கை நிறையச் சம்பாதிக்கக் கூடிய மனிதர்கள் கூட இன்றைய எமது நாட்டினுடைய பொருளாதார நிலைமை தம்முடைய வாழ்வில் பாரிய தாக்கத்தினை செலுத்தி உள்ளது என்று கூறும் அளவிற்கு இருக்குமேயானால்,கொடுப்பதை எடுத்துக்கொண்டு குருவி சேர்ப்பதுபோல நாணயக் குற்றிகளைச் சாரிமடிப்பில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கும் இவர்கள் மத்தியில் பெரும் பெரும் உழைப்பாளிகள் எங்கே இருக்கிறார்கள். தீர்வற்ற தீராத் திகிலால் திண்டாடிக் கொண்டு இருக்கும் அவர்களது வாழ்வில் வயிறார உணவு உண்டு பல நாளாயிற்று என்ற குரல்களும் இன்றுவரை ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறு பல கனவுகள், ஆசைகள் சுமந்து வாழும் அவர்களது வாழ்வில் இருள் நீங்கி, விடியல் பிறக்க நாம் அவர்களுக்கு எம்மால் இயன்றளவு கொடுத்து உதவுவது என்பது எம்மை சகல தீய சக்திகளிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளப் பக்கபலமாய் இருக்கும். மாறாக அவர்களது உணர்வுகளையும், ஆசைகளையும், ஏக்கங்களையும் வெறுமனே பார்த்து விட்டுக் கடந்து செல்லாமல் அவற்றுக்கு மதிப்பளித்து அவர்களை நம்மில் ஒரு வராகமதித்துச் செல்லப் பழகுவது எமது தலையாய கடமையாக இருந்து வருகிறது.

# ட்ரம்ப்பை தோற்கடித்த இந்திய வம்சாவளிப் பெண் நிக்கி ஹாலே



அமெரிக்காவின் வொஷிங்டன் மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புக்கு எதிராக நிக்கி ஹாலே முதல் வெற்றியைப் பெற்றுள்ளார்.

அமெரிக்காவில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. அந்நாட்டில் ஜனநாயக மற்றும் குடியரசு ஆகிய கட்சிகள் பிரதான கட்சிகளாக உள்ளன. இதில், ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் தற்போது அமெரிக்க அதிபராக உள்ளார். இவருடைய பதவிக் காலம் இந்த வருடத்துடன் முடியவுள்ளதால், வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

அந்த வகையில், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்திய வம்சாவளியான நிக்கி ஹாலே ஆகியோர் களத்தில் உள்ளனர். இவர்களில் ட்ரம்ப் முன்னிலையில் உள்ளார். ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதிபர் ஜோ பைடன், ட்ரம்ப்பை எதிர்த்து மீண்டும் களமிறங்குகிறார்.

இந்த நிலையில், வொஷிங்டனில் நேற்று நடைபெற்ற தேர்தலில் நிக்கி ஹாலே வெற்றி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் ஒவ்வொரு மாகாணத்திலும் தேர்தல் நடத்தப்பட்டு அதில் அதிக வாக்குச் சதவிகிதம் படைத்த நபரே, அந்நாட்டு ஜனாதிபதி, தேர்தலில் குடியரசு கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படுவார்.

ஏற்கெனவே ஜனாதிபதியாகப் பதவி வகித்த டொனால்ட் ட்ரம்ப்பிற்கு ஆதரவு அதிகமாக இருந்து வருகிறது. இந்த நிலையில்தான், வொஷிங்டனில் நேற்று நடைபெற்ற தேர்தலில் நிக்கி ஹாலே வெற்றி பெற்றுள்ளார். டொனால்ட் ட்ரம்ப்பிற்கு எதிராக நிக்கி ஹாலே பெறும் முதல் வெற்றி இதுவாகும். மேலும், அமெரிக்க வரலாற்றில் குடியரசுக் கட்சி பிரைமரியில் வெற்றிபெற்ற முதல் பெண் இவராவார். எனினும், அவர் தனது சொந்த மாநிலமான தெற்கு கரோலினாவில் தோல்வியுற்றிருந்தார். அதேநேரத்தில், தொடர்ந்து வெற்றிபெற்று வந்த டொனால்ட் ட்ரம்ப்பிற்கு இது முதல் தோல்வியாக அமைந்துள்ளது.

வொஷிங்டன் ஜனநாயக கட்சியின் கோட்டையாக விளங்குகிறது. இங்கு நிக்கி ஹாலே 63 சதவீத வாக்குகள் பெற்றுள்ளார். கடந்த 2020ஆம் ஆண்டு தேர்தலின்போது வொஷிங்டனில் டிரம்ப்பிற்கு எதிராக ஜோ பைடன் 92 சதவீத வாக்குகள் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹாலேவுக்கு தற்போது 52 வயதாகிறது. சதுப்புநிலத்தின் ராணி என அழைக்கப்படும் இவரின் குடும்பம், இந்தியாவின் பஞ்சாப்பைப் பூர்வீகமாகக் கொண்டது. அமெரிக்காவின் தெற்கு கரோலினா பகுதியில் வசித்த நிக்கி, அம்மாகாண ஆளுநராக 39 வயதில் பதவியேற்றார்.

அத்துடன், 'அமெரிக்காவின் இளம் ஆளுநர்' என்ற சாதனையையும் படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கருக்கலைப்பை அடிப்படை உரிமையாக்கியது பிரான்ஸ்




பிரான்ஸில் கருக்கலைப்பைப் பெண்களின் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கும் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசியலமைப்பில் கருக்கலைப்பு உரிமைகளை வெளிப்படையாகப் பதிவு செய்த முதல் நாடாக பிரான்ஸ் திகழ்கிறது.

பிரான்ஸ் பாராளுமன்ற மேலவையில் நடைபெற்ற சிறப்பு அமர்வில் இதற்கு ஆதரவாக 780 உறுப்பினர்களும் எதிராக 72 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இதனையடுத்து சட்டம் நிறைவேற்றப்பட்டது. முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களுக்குப் பாரம்பரிய முறைப்படி ஆரம்ப விழாநடத்தப்படுவது அந்த நாட்டில் வழக்கம்.

அந்த வகையில் எதிர்வரும் மகளிர் தினத்தன்று இதற்கும், விழா நடைபெறும் என அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார். சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, ஈஃபிள் டவர் முன் திரண்டு மகளிர் அமைப்பினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

## சர்ச்சைக்குள்ளான மாணவர்களின் போட்டி



அமெரிக்காவில் ஒக்லஹோமா மாகாணத்தில் உள்ள Deer Creek பாடசாலை, ஒருவார கால நிதி திரட்டும் சமூக சேவைக்கான பணிகளை மேற்கொண்டு உள்ளது. இதற்காக மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டு பல்வேறு வழிகளில் நிதி சேகரிக்கும் பணி நடைபெற்றுள்ளது.

அதில் ஒன்றாக, மாணவர்களின் கால் பெருவிரல்களில் கடலைகள் மூலம் தயாரிக்கப்பட்ட எண்ணெய்யைத் தடவி விட்டுள்ளனர். அதனை சக மாணவர்கள், தரையில் படுத்தபடி நாக்கால் நக்கவேண்டும்.

இதில், 9 முதல் 12 வரையிலான வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் நாற்காலிகளில் அமர வைக்கப்பட்டனர். அவர்களின் கால் பெருவிரல்களில் கடலை எண்ணெய் தடவப்பட்டது. போட்டி என்ற பெயரில், சக மாணவர்கள் அதனை நக்கினர். மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில், சக மாணவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இது தற்போது இணையத்தில் வேகமாகப் பரவி வரும் நிலையில், அதற்கு எதிரான விமர்சனங்கள் அதிகளவில் எழுந்துள்ளன.

இதுகுறித்து மாணவர்கள், எங்களை இப்படி எல்லாம் செய்ய விடுவார்கள் என்று நினைக்கவில்லை. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தோம் எனத் தெரிவித்தனர்.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள கடிதத்தில், இந்த குறிப்பிட்ட போட்டியின் மூலம் மாணவர்களின் கண்ணியத்தையும், நமது சமூகத்தின் பெருமையையும் நிலைநிறுத்துவதில் தவறிவிட்டோம். அவர்களைப் பாதுகாத்து, நேர்மறையாகக் காண்பிக்கும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது. நாங்கள் அதைச் செய்யத் தவறிவிட்டோம், அதற்காக நாங்கள் பெரிதும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளது.

## மது கடத்தலில் ஈடுபட்ட மூன்று பெண்கள் கைது



மதுபான போத்தல்களை கடத்திய மூன்று பெண்கள், பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் புதிய பஸ் நிலையம் பகுதியில் மூன்று பெண்கள் சந்தேகத்திற்கிடமாக மூன்று பைகளுடன் நின்றுகொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த பொலிஸாரைக் கண்ட அவர்கள் மூன்று பேரும், அவசர அவசரமாக அங்கிருந்து, முச்சகரவண்டி ஒன்றில் ஏறி தப்பிக்க முயன்றனர்.

இதனால் சந்தேகமடைந்த பொலிஸார், குறித்த மூன்று பேரையும் பிடித்து, அவர்கள் கொண்டு வந்த பையை சோதனை செய்ததில், அந்த பைகளில் மது போத்தல்கள் இருந்தது தெரியவந்தது. உடனடியாக மூன்று பேரையும் கைது செய்த பொலிஸார் முழுமையாக சோதனை செய்ததில் 300க்கும் மேற்பட்ட மது போத்தல்கள் இருந்தது தெரியவந்தது.

இந்நிலையில், கைப்பற்றப்பட்ட மதுபோத்தல்களை பறிமுதல் செய்த பொலிஸார், குறித்த மூன்று பெண்களையும் கைது செய்ததோடு, இந்த கடத்தல் தொடர்பாக அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாம் தமிழர் கட்சி வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி



கரும்பு விவசாயி சின்னத்தை ஒதுக்கீடு செய்யக் கோரி, நாம் தமிழர் கட்சி, டெல்லி உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை, உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. மேலும், இவ்விவகாரத்தில் தலையிடுவது தேர்தல் ஆணையத்தின் விதியை மீறுவது என டெல்லி உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

நாம் தமிழர் கட்சியின் சின்னமான கரும்பு விவசாயி சின்னம், கர்நாடகாவைச் சேர்ந்த வேறு ஒரு கட்சிக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில், சின்னத்தைப் பெற்றுத்தருமாறு கோரி, நாம் தமிழர் கட்சி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்த நிலையில், அதனை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.




# பங்களாதேஷை வென்ற இலங்கை

பங்களாதேஷுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், சியல்ஹெட்டில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

இலங்கை: 206/3 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: சதீர சமரவிக்கிரம ஆ.இ 61 (48), குசல் மெண்டிஸ் 59 (36), சரித் அசலங்க ஆ.இ 44 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: றிஷாட் ஹொஸைன் 1/32 [4], சௌமியார் சர்க்கார் 0/1 [1])

பங்களாதேஷ்: 203/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜாகிர் அலி 68 (34), மகமதுல்லா 54 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஞ்சலோ மத்தியூஸ் 2/17 [3], மகேஷ் தீக்ஷன 1/32 [4])

போட்டியின் நாயகன்: சரித் அசலங்க

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

### இங்கிலாந்து பிரீமியர் லீக்

## ஷெஃபீல்ட் யுனைட்டெட்டை வென்ற ஆர்சனல்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், ஷெஃபீல்ட் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 6-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாக மார்டின் ஒடெகார்ட், கப்ரியல் மார்ட்டினெல்லி, கை ஹவேர்ட்ஸ், டெக்லான் றைஸ், பென் வைட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 63 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 62 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியும், 61 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஆர்சனலும், 55 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அஸ்டன் வில்லாவும் காணப்படுகின்றன.



### தேசிய ரீதியில் சாதித்த

## அல்-அமீன் வித்தியாலய மாணவருக்கு தௌபீக் வாழ்த்து

எப். முபாரக்

அகில இலங்கை ரீதியிலான 20 வயதுக்குட்ப்பட்டோருக்கான பிரிவு இரண்டில் சம்பியனான திருகோணமலை கிண்ணியா அல்-அமீன் வித்தியாலய மாணவருக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

குறித்த தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்று அல்-அமீன் வித்தியாலயம் சம்பியனாகியிருந்தது.

## 'மெஸ்ஸியுடன் இணைந்து விளையாட ஆசை'



ஆர்ஜென்டீனாவின் முன்களவீரரான லியனல் மெஸ்ஸியுடன் மீண்டும் இணைந்து விளையாட ஆசை என பிரேஸிலின் முன்களவீரரான நெய்மர் தெரிவித்துள்ளார்.

மெஸ்ஸியும், நெய்மரும் நண்பர்கள். ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவிலும், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனிலும் இணைந்து விளையாடியுள்ளனர்.


இந்நிலையில் தற்போது 36 வயதான மெஸ்ஸி ஐக்கிய அமெரிக்க கழகமான இன்டர் மியாமியிலும், 32 வயதான நெய்மர் சவுதி அரேபியக் கழகமான அல் ஹிலாலிலும் விளையாடி வருகின்றனர்.

ஐக்கிய அமெரிக்காவில் விளையாடுவதைத் தான் விரும்புவதாகவும், குறைந்தது ஒரு பருவககாலத்துக்காவது அங்கு விளையாட விரும்புவதாக நெய்மர் கூறியுள்ளார்.

### புத்தளம் லெஜன்ட்ஸ் சுப்பர் லீக்

## சம்பியனான கொழும்பு கெடேரியன்

எம்.யூ.எம். சனூன்



புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் ஸ்தாபகர் முஹம்மது யமீனின் ஏற்பாட்டில் நடைபெற்ற லெஜன்ட்ஸ் சுப்பர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் கொழும்பு கெடேரியன் கழகம் சம்பியனானது.

அணிக்கு ஒன்பது பேரைக் கொண்ட 8 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் கலகெதர எவர்கிறீன் கழகத்தை வென்ரே கெடேரியன் சம்பியனானது.

இறுதிப் போட்டியில் எதுவிதக் கோல்களும் பெறப்படாமல் சமநிலையில் முடிவடைந்ததையடுத்து பெனால்டியில் கெடேரியன் சம்பியனானது.

இத்தொடரின் சிறந்த கோல்காப்பாளராக எவர்கிறீனின் இந்திகவும், சிறந்த வீரராக கெடேரியனின் நியாஸும் தெரிவாகினர்.







சம்பியனான கெடேரியனுக்கு 50,000 ரூபாய் பணப் பரிசும் வெற்றிக் கிண்ணமும், இரண்டாமிடத்தைப் பெற்ற கெடேரியனுக்கு 25,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டன.

புத்தளம் லிவர்பூல் கழகம், புத்தளம் நியூ ஸ்டார்ஸ் கழகம், திருகோணமலை ட்ரிங்கோ எப்.சி, குருநாகல் கார்டியன் எப்.சி, கண்டி லைட் இன்பென்ட்ரி கழகம், பரஹதெனிய லெவிண் ஸ்டார் கழகம் ஆகியனவே இத்தொடரில் பங்கேற்ற ஏனைய கழகங்களாகும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 06, மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.